



# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
## திருச்சிராப்பள்ளி மாவட்டம்
(திட்டமில்லா பகுதி)

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் வட்டம் (ம) ஊராட்சி ஒன்றியம, காட்டுப்புத்தூர் கிழக்கு கிராமம், சர்வே எண்: 43/1A1A, 1A1B, 1A1C - ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான சாலை அமைப்பு ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1:400

இணையதள விண்ணப்ப எண் : Q0JUXDWF/27412/2024

வ

**குறிப்பு :**

| | | | |
|---|---|---|---|
| மனைப்பிரிவின் பரப்பு | : 5532.00 ச.மீ | | |
| சாலை (ம) மூலை முடக்கு பரப்பு நீங்கலாக மனைப்பிரிவின் பரப்பு | : 4030.83 ச.மீ | | |
| மனைப்பிரிவின் எல்லை | : | | |
| நிலையில் உள்ள சாலை | : | | |
| கோரிய மனைகள் | : 22 | | |
| ஒதுக்கிய மனைகள் | : 22 | | |

**பொது ஒதுக்கீடு:** (ஆவண எண்:1483/2024 , நாள்: 19.06.2024 மூலம் கீழ்க்கண்டவாறு உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| மனைப்பிரிவு சாலைகள் (ம) மூலை முடக்குகள் | : 1501.17 ச.மீ | | |
| உள்ளாட்சி உபயோகம் | : 52.40 ச.மீ | (1.30 %) | |
| மின்வாரிய உபயோகம் (TANGEDCO) | : 37.42 ச.மீ | (0.92 %) | |

**கட்டிட பக்க திறவிட வரம்பு:**

அரசாணை எண் 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019 (TNCDBR -2019)-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டிட பக்க திறவிடம் விடப்பட வேண்டும்

**மூலை முடக்கு:**

சாலையின் அகலம் 12.0மீ. வரை 1.50மீ x 1.50மீ, சாலையின் அகலம் 12.0மீ முதல் 30.50மீ வரை 4.50மீ x 4.50மீ மற்றும் 30.50மீ மேல் 6.0மீ x 6.0மீ என்ற அளவில் விடப்பட வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1) அரசாணை எண்: 18 (ம) 16, ந.நி (ம) கு.வ.துறை நாள்: 04.02.2019 (ம) 31.01.2020-ன் விதிகள் அனைத்தும் இதற்கு பொருந்தும்.
2) இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடத்தில் எவ்வித நில ஆர்ஜித நடவடிக்கையும் இல்லை என்பதையும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதபட்டியல் மாவட்ட அலுவலரால் பெறப்படவில்லை என்பதையும் உள்ளாட்சி அலுவலர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு துறையால் இரத்து செய்யப்படும்.
4) விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வானையின் நகலோடு, நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றமும் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6' x 4' அளவிளான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6) உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.
7) The Tamil Nadu Government in G.O.Ms.No: 112, housing and Urban Development Department dated: 22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.
8) அரசாணை எண்: 79 வீ.வ. (ம) ந.வ. துறை, நாள்: 4.5.2017 -ன் படி இந்த உத்தேச மனைப்பிரிவிற்கு சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899 -ம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்தியச் சட்டம் 2 /1899) உட்கூறு AA பிரிவு 47 -ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்து, அரசுக் கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைத்து, செய்யக் கருதியுள்ள மேம்பாட்டுப் பணியை மேற்கொள்ள உரிய அனுமதி அளிக்க வேண்டும்.
9) உத்தரவு கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.
10) பாசன வாய்க்கால், கால்வாய்கள் மற்றும் இயற்கை வடிகால் ஆகியவை தடைபடாமல் எவ்வித ஆக்கிரமிப்புமின்றியும் வெள்ளப்பெருக்கத்தினால் அருகிலுள்ள பகுதிகள் பாதிக்கப்படாமலும் இம்மனைப்பிரிவு அமைக்கப்பட வேண்டும்.

**குறிப்பு:**

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது

ம.வ/ந.ஊ.இ.இ.(திமா) எண்:163/2024
(இணையதள ஒப்புதல்)

(இ-சைன் செய்யப்பட்டது)
இணை இயக்குநர் (மு.கூ.பொ).,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

Signature Not Verified

14|8|24
வரைவாளர் நிலை-3

14|08|24
கட்டிடக்கலை/திட்ட உதவியாளர்